**கெக்கிராவ பிரதேச சபை - 2023**
-----------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கெக்கிராவ பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்றுஇ தேறிய சொத்துக்கள்.'. உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் கெக்கிராவ பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப் பரப்பு (நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபை 2023 ஆம் ஆண்டின் போது நடைமுறைப்படுத்தியிருந்த 03 செயற்திட்டங்களுக்குரிய சான்றுபடுத்திய ரூபா 5,059,572 பணிகள் மீளாய்வாண்டின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் மூலதன மானியங்களாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பது | சான்றுபடுத்திய பணிகளின் பெறுமதி மூலதன மானியங்கள் மற்றும் சொத்துக்களாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பிரதேச சபைக்கு சொந்தமான ஆயர்வேத மத்திய நிலையத்தின் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 262,792 தொகையான மருந்துப் பொருட்களின் மீளாய்வாண்டின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் இருப்பின் கீழ் காண்பிக்கப்பட்டிராததுடன், மீளாய்வாண்டின் போது ரூபா 2,954,051 தொகையான மருந்துப்பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், விரிவான வருமானக் கூற்றில் அது ரூபா 2,251,435 ஆக குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | சரியான பெறுமதிகள் கணக்கு வைக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் போது ஹபரண வாரச்சந்தைக்கு ரூபா 120,000 தொகையான சரளைக்கற்கள் இடப்பட்டமை மீண்டெழும் செலவினமாக மூலதனமாக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | சரளைக்கல் வீதி நிர்மாணம் மீண்டெழும் செலவினமாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஈ) | புதிய சபைக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக சான்றுபடுத்திய பணிகளின் பெறுமதி ரூபா 63,704,359 ஆன போதிலும், மீளாய்வாண்டின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் இது ரூபா 58,025,712 ஆக குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | சரியான பெறுமதி கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் நெநசல வருமானப் பட்டியல்கள் ரூபா 204,100 ஆன போதிலும், விரிவான வருமானக் கூற்றில் அது ரூபா 192,200 ஆக குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | சரியான பெறுமதி கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஊ) | உடன்படிக்கை அல்லது கடப்பாடொன்று இல்லாது நானாவித கடன்பட்டோரின் கீழ் மீளாய்வாண்டின் போது ரூபா 1,192,369 தொகையான நடைமுறை பொறுப்பு கணக்கு வைக்கப்பட்டமையால் சபையின் நடைமுறைப் பொறுப்பு அந்த பெறுமதியால் அதிகரித்திருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகளின் கூட்டுத்தொகை மற்றும் நிதிக்கூற்றுக்களில் 09 கணக்குகளின் மீதிகளுக்கிடையே ரூபா 7,563,071 தொகையான இணக்கம் செய்யப்படாத வேறுபாடொன்று காணப்பட்டது. | ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பது | ஒத்த அறிக்கைகள் பட்டோலைகளுடன் ஒப்பிடப்பட வேண்டும். |
| (ஆ) | 04 உருப்படிகளுக்கு உரியதாக காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 79,753,248 ஆன போதிலும், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றின் பிரகாரம் அந்த பெறுமதி ரூபா 92,041,291 ஆனமையால் ரூபா 12,288,043 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | -மேற்படி- | -மேற்படி- |

## 1.7 இணங்காமைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 30/2016 இன 3.1 ஆம் பந்தி | சபைக்கு சொந்தமான 16 வாகனங்கள் தொடர்பில் எரிபொருள் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 19,793,492 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 19,526,542 ஆகும்.

### 2.2 நிதி நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆம் ஆண்டின் போது கிடைத்திருந்த ரூபா 4,348,131 தொகையான முத்திரைக் கட்டணம் மற்றும் ரூபா 6,820,255 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் அத்தியாவசியமான பணிகள் மற்றும் செயற்திட்டங்களுக்காக செலவிடப்படாது பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிந்தது. | ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பது. | பணத்தை விளைவற்று வைத்திருக்காது உரிய பணிகளில் ஈடுபடுத்த வேண்டும். |

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டு மற்றும் கடந்த ஆண்டிற்குரிய மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | வருமான வழி | 2023 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 ஆம் திகதியில் மொத்த நிலுவை | 2022 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 ஆம் திகதியில் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபாய். | ரூபாய். | ரூபாய். | ரூபாய். | ரூபாய். | ரூபாய். | ரூபாய். | ரூபாய். |
| (i) | வீத வரி மற்றும் வரி | 8,499,935 | 9,644,160 | 10,580,971 | 4,897,429 | 8,346,305 | 8,310,096 | 7,967,449 | 5,834,240 |
| (ii) | வாடகை | 15,463,600 | 13,018,269 | 11,905,888 | 7,173,056 | 16,545,100 | 11,559,206 | 12,244,842 | 6,060,675 |
| (iii) | அனுமதி பத்திர கட்டணம் | 5,932,650 | 7,921,792 | 8,008,292 | 258,500 | 5,899,650 | 4,675,015 | 4,920,215 | 345,000 |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 37,287,000 | 51,605,675 | 7,932,587 | 49,508,307 | 23,376,000 | 49,893,169 | 107,199,470 | 5,835,219 |
| | | 67,183,185 | 82,189,896 | 38,427,738 | 61,837,292 | 54,167,055 | 74,437,486 | 132,331,976 | 18,075,134 |

### 2.3.2 வருமான சேகரிப்பு செயலாற்றுகை

சபையின் வருமான சேகரிப்பு செயலாற்றுகை தொடர்பான அவதானிப்புகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரியும் வரியும்** | | |
| (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக காணப்பட்ட ரூபா 3,363,457 தொகையான நிலுவை வீதவரியை அறவிடுவதற்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பது. | நிலுவை வீதவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | அதிகாரப்பிரதேசத்தில் உள்ள வணிகங்கள் மற்றும் தொழில்கள் குறித்து முறையான கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, அந்த வருமானங்கள் சரியாகக் கண்டறியப்படவில்லை மற்றும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை, தொழில் வரி ரூபா 29,250 மற்றும் வணிக வரி ரூபா 99,460 தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | மதிப்பாய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை. | மதிப்பாய்வுப் பணிகளை உரிய காலத்தில் மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | மூடப்பட்டுள்ள ராணி தியேட்டருக்காக ரூபா 773,887 தொகையும், நடாத்திச் செல்லப்படும் EDC தியேட்டருக்காக ரூபா 631,274 தொகையும் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அறவிடப்பட வேண்டிய போதிலும், அந்த நிலுவைத் தொகையை அறவீடு செய்தல் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதற்காக ஒதுக்கப்பட்ட வழக்கைத் தாக்கல் செய்வதில் உள்ள குறைபாடுகள் காரணமாக, குற்றம் சாட்டப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டதன் காரணமாகத் தொகையை அறவிட முடியவில்லை என்பது. | வழக்கை சரியாக தாக்கல் செய்வது தொடர்பாக, பொறுப்பு வாய்ந்த தரப்பினர் குறித்து முறையான விசாரணை நடத்தி, சபைக்கு ஏற்பட்ட இழப்பை அறவிட வேண்டும். |

**(ஆ) வாடகை**

| | | | |
|---|---|---|---|
| (i) | சபைக்கு சொந்தமான 14 கடைகளுக்காக அஅறவிடப்பட வேண்டிய ரூபா 2,206,425 தொகையான நிலுவை வாடகை அறவிடப்பட்டிருக்காதுடன், வாடகை செலுத்தாத கடைகளின் உடன்படிக்கையை இரத்துச் செய்து அவற்றின் நிலுவை வாடகையை அறவிட சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வழக்குத் தீர்ப்பு கிடைத்த பின்னர் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நிலுவை கடை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | நடமாடும் 07 கடைகளுக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 135,000 அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், வாடகை செலுத்தாத கடைகளை மீள சபைக்கு சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைத் தொகையை அறவிடுவதற்க சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், வாடகை செலுத்தாத கடைகளை மீள சுவீகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | சபைக்கு சொந்தமான சொத்துக்களை குத்தகைக்கு வழங்கியமைக்காக அறவிடப்பட வேண்டிய நிலுவை வாடகை ரூபா 2,659,132 ஆக காணப்பட்டதுடன், 01 முதல் 13 வருடங்களுக்கு இடைப்பட்ட காலமாக முன்கொண்டுவரப்படும் அந்த நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கான பணிகள் மீளாய்வாண்டில் இடம்பெற்றிருக்கவில்லை. | அழைப்பாணை விடுக்கப்பட்டு ரூபா 40,695 அறவிடப்பட்டுள்ளமை மற்றும் எஞ்சிய தொகையை அறவிடுவதற்கு வழக்கு தொடரப்பட்டுள்ளது என்பது. | சட்ட நடவடிக்கை எடுத்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iv) | சபைக்கு சொந்தமான இயந்திரங்களை வாடகைக்கு வழங்கியமையால் அறவிடப்பட வேண்டிய ரூபா 1,956,804 தொகையை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 175,000 அறவிடப்பட்டுள்ளது என்பது மற்றும் எஞ்சிய நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றமை. | அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**(இ) அனுமதிப்பத்திரக் கட்டணம்**

| | | |
|---|---|---|
| வியாபார நிறுவனங்களுக்கான வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் ரூபா 17,000 தொகையும், அறிவித்தல் பலகைகள் 05 இற்கான அறிவித்தல் பலகைக் கட்டணம் ரூபா 115,500 தொகையும், சுற்றாடல் அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் ரூபா 68,000 தொகையும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வியாபார அனுமதிப்பத்திரங்களுக்கு ரூபா 3,000 தொகையும், அறிவித்தல் பலகைகளுக்கு ரூபா 55,000 ரொகையும் அறவிடப்பட்டுள்ளது என்பது. | எஞ்சிய நிலுவைத் தொகையையும் அறவிடுவதற்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**(ஈ) ஏனைய வருமானங்கள்**

| | | |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளரினதும், ஏனைய உத்தியோகத்தர்களினதும் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 48,225,326 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 989,500 தொகையும் பெற வேண்டியதாக காணப்பட்டதுடன், 2023 ஆம் ஆண்டுக்குரிய முத்திரைக் கட்டணமும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. | வருமானத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது நெடுஞ்சாலைகள் மற்றும் கிளை வீதிகள் தொடர்பான காரணிகளை முறைப்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல், மக்களின் நன் நடத்தை, வசதிகள் மற்றும் நலன் ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டி இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட காரணிகள் கீழே தரப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 30 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகளை விதிக்க முடியுமாக இருந்த போதிலும், 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்த விடயங்களுக்காக உப விதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன், உள்ளூராட்சி ஆணையாளரால் 1988 ஆகஸ்ட் 23 ஆந் திகதிய 520/7 ஆம் இலக்க மற்றும் 2016 மார்ச் 30 ஆந் திகதிள 1960/35 ஆம் இலக்க | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. | உப விதிகளை விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் வெளியிடப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட உப விதி 2016 ஒக்தோபர் 10 ஆந் திகதி முதல் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | | |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான மரதன்கடவல, பலுகஸ்வெவ மடாடுகம உப அலுவலகங்கள் தொடர்பில் போதிய கண்காணிப்பு மற்றும் உரிய வசதிகள் பெற்றுக்கொடுப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. | உப அலுவலகங்களில் போதிய வசதிகளை வழங்குதல் மற்றும் அதன் பணிகளை கண்காணித்தல் வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டு 01 முதல் 08 வருடங்குள்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த 04 வாகனங்களை கைத்தவிர்ப்பதற்கு 2023 ஆம் ஆண்டின் போதும் பிரதேச சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பொறியியலாளரின் அறிக்கையை பெற்று மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | கைத்தவிர்ப்பு நடவடிக்கைகள் தாமதமின்றி மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | சபைக்கு சொந்தமான 07 கடைகளை புனரமைப்பு செய்து குத்தகைக்கு வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பழுதுபார்ப்பதற்குரிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றமை. | பழுதுபார்த்தல் நிறைவு செய்யப்பட்டு குத்தகைக்கு வழங்குதல் இடம்பெற வேண்டும். |

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வருடாந்த பாதீட்டின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக காணப்பட்ட பணிப்பொறுப்புகளுக்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பது. | தேவையான விபரங்களுடன் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |